செ.வெ.எண்:195 நாள்:28.03.2021

**வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.03.2021) நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் ஏப்ரல் 6 ல் நடைபெற உள்ளது. சட்டமன்ற தேர்தலையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் மே 2-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது.

அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்றையதினம் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் பதிவாக உள்ள வாக்குகள் புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தில் எண்ணப்பட உள்ளது.

தேர்தல் முடிவுற்ற உடன் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணும் மையத்திற்கு பாதுகாப்பாக கொண்டு வரவும், வாக்குகள்

எண்ணும்பொழுது வேட்பாளர் மற்றும் முகவர்கள் அமர்வதற்கு மேசைகள் ஏற்பாடு செய்யவும், வாக்குகள் எண்ணுவதற்கு தனித்தனி மேசை வசதிகள் ஏற்பாடு செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் உள்ளேயும், வெளியேயும் உரிய பாதுகாப்பு தடுப்பு கட்டைகள் அமைக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வாக்கு எண்ணும் மையத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் காவல்துறையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளவும், கண்காணிப்பு கேமரா மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், சார் ஆட்சியர் ஆனந்த் மோகன்,இ.ஆ.ப., சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் டெய்சிகுமார், தண்டாயுதபாணி, அக்பர் அலி, கருணாகரன், கிருஷ்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**